**நவம்பர் – 17**

# TNPSC துளிகள்

- முதலாவது ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ் அல்லது பழங்குடியின கௌரவ தினத்தன்று பகவான் பிர்சா முண்டா நினைவு மற்றும் சுதந்திரப் போராட்ட நினைவு அருங்காட்சியகத்தை ஜார்க்கண்டின் ராஞ்சியில் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
    - ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ் நவம்பர் 15 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- கலாச்சாரம் சார்ந்த சொத்துக்களை சட்டவிரோதமாக கடத்துவதற்கு எதிரான சர்வதேச தினமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14 அன்று அனுசரிக்கப்படுகிறது.
    - ஒவ்வோர் நாட்டிலும் திருட்டு, சூறையாடுதல் மற்றும் கலாச்சாரம் சார்ந்த சொத்துக்களை சட்டவிரோதமாக கடத்துதல், மக்களின் கலாச்சாரம், அடையாளங்கள் மற்றும் வரலாற்றைச் சூறையாடுதல் போன்றவை நிகழ்வதால் இந்தக் குற்றங்களை எதிர்த்துப் போரிட நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதை இத்தினமானது உலகிற்கு நினைவூட்டுகிறது.
- மாணவர்கள் பாலியல் துன்புறுத்தல் குறித்து புகார் அளிப்பதற்கு 14417 என்ற உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறு தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.
    - மேலும் தனியார் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, சிறார் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்து விளக்கமளிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

# தமிழ்நாடு செய்திகள்

## V. திருப்புகழ்




- சென்னை நகர்ப்புறப் பகுதியில் வெள்ள அபாயத்தைத் தணித்தல் மற்றும் மேலாண்மை தொடர்பான ஆலோசனைக் குழுவைத் தலைமையேற்று நடத்தச் செய்வதற்காக ஓய்வு பெற்ற இந்திய குடிமைப்பணி அதிகாரி V. திருப்புகழ் என்பவரை தி.மு.க அரசு நியமித்துள்ளது.
- இவர் குஜராத் மாநிலத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடியின் கீழும், பிரதமரான பிறகு தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திலும் பணி புரிந்துள்ளார்.
- திருப்புகழ் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் பணி புரிந்த போது 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னை மற்றும் காஞ்சிபுரம் வந்த ஒரு குழுவிற்குத்

தலைமை தாங்கினார்.

- 'தமிழ்நாடு வெள்ளங்கள் – கற்றப் பாடங்களும் & சிறந்த நடைமுறைகளும்' என்ற ஒரு தலைப்பில் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் இவரது குழு மேற்கொண்ட கண்டுபிடிப்புகள் இடம் பெற்றன.

### ஒவ்வொரு மாநில அரசு ஊழியர்களுக்கும் மின்னஞ்சல் முகவரி

- தமிழக மாநில அரசானது, மாநில அரசு ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப் பட்ட மின்னஞ்சல் முகவரியானது வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் முன்னதாக அறிவித்திருந்தது.
- இந்த அறிவிப்பினைச் செயல்படுத்துவதற்காக தமிழக மாநில அரசு, அதற்குரிய ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது.
- இந்த அரசாணையின்படி, தமிழக அரசின் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் 3 ஆண்டுகளுக்குள் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியானது வழங்கப்படும்.

## தேசியச் செய்திகள்

### சாத்விக் சான்றிதழ்




- இந்திய இரயில்வே சமையல் மற்றும் சுற்றுலாக் கழகமானது இந்திய சாத்விக் சபையுடன் இணைந்து "சைவ இரயில்களை" அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.
- இந்த இரயில்கள் குறிப்பாக மத வழிபாட்டுத் தலங்களுடன் இணைக்கப்படும்.
- "சாத்விக் சான்றிதழானது" இந்திய சாத்விக் சபையினால் வழங்கப்படுகிறது.
- தற்போது, புதுடெல்லி முதல் காத்ரா வரையில் இந்திய இரயில்வே சமையல் மற்றும் சுற்றுலாக் கழகமானது 'வந்தே பாரத் இரயிலை' இயக்கி வருகிறது.
- இந்த இரயிலுக்கு 'சாத்விக் சான்றிதழ்' வழங்கப்பட உள்ளது.
- வந்தே பாரத் மட்டுமின்றி, 18 இதர இரயில்களுக்கும் இந்திய சாத்விக் சபை சான்றிதழ் அளிக்க உள்ளது.

## TVS மோட்டார் நிறுவனம்

- TVS மோட்டார் நிறுவனமானது ஐக்கிய நாடுகளின் உலகளாவிய ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் உலகளாவிய ஒப்பந்தமானது உலகின் மிகப்பெரிய தன்னார்வ பெரு நிறுவன சுற்றுச்சூழல் நிலைத்தன்மை முன்னெடுப்பாகும்.
- TVS மோட்டார் நிறுவனமானது இந்த ஒப்பந்தத்தில் இணைந்த முதலாவது இந்திய இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகன உற்பத்தி நிறுவனமாகும்.
- TVS மோட்டார் நிறுவனமானது ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு இலக்குகளை, குறிப்பாக நிலையான சுற்றுச்சூழல் மேம்பாட்டு இலக்குகளை மேம்படுத்தும் கூட்டுத் திட்டங்களிலும் ஈடுபட உள்ளது.

## உலகின் முதலாவது வணிகப் பங்குதாரர் திட்டம்

- பாரத்பே நிறுவனமானது தனது வணிகப் பங்குதாரர்களுக்காக உலகின் முதலாவது வணிகப் பங்குதாரத் திட்டத்தினைத் தொடங்கியது.
- இது 100 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், பாரத்பே நிறுவனம், தனது வணிக வாடிக்கையாளர்கள் அதன் பங்குதாரர் ஆவதற்குமான வாய்ப்பினையும் வழங்குகிறது.
- இந்த நிறுவனமானது 2024 ஆம் ஆண்டுக்குள் பொதுப் பட்டியலை வெளியிடத் திட்டமிட்டு 1 பில்லியன் டாலர் மதிப்பில் பொதுப் பட்டியலையும் இலக்காக நிர்ணயித்துள்ளது.

## பதவி நீட்டிப்பிற்கான புதிய அவசரச் சட்டங்கள்




- இந்தியாவின் மத்திய அரசானது அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்பு ஆகியவற்றின் இயக்குநர்களுடைய பதவிக் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீட்டிப்பதற்கான இரண்டு அவசரச் சட்டங்களை வெளியிட்டது.
- தற்போது அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளின் இயக்குநர்கள் 2003 ஆம் ஆண்டு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையச் சட்டத்தினால் 2 ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கப்படுகின்றனர்.
- அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளின் இயக்குநர்களை முதலில் 2 ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கலாம்.

- எனினும் தேவைப்பட்டால் அவர்களின் பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாம்.
- 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு வேண்டி ஒவ்வொரு வருடமும் தனித்தனி நீட்டிப்பு உத்தரவுகள் அளிக்க வேண்டும்.
- எனினும் அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்பின் இயக்குநர்களின் தனது 5 ஆண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்த பிறகு எந்தவொரு பதவி நீட்டிப்பும் வழங்கப் படக் கூடாது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கமோஓலேவா



- கமோஓலேவா எனும் குறுங்கோளானது புவியினைப் போன்று உள்ள ஒரு பகுதியளவு துணைக் கோளாகும்.
- இது ஹவாயிலுள்ள PanSTARRS என்ற தொலைநோக்கியின் மூலம் 2006 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட, புவியின் ஒரு பழைய துணைக்கோளாகும்.
- பூமிக்கு அருகிலுள்ள விண்பொருளாக கருதப்படும் இது, பூமியிலிருந்து சுமார் 9 மில்லியன் மைல்களுக்கு அருகில் சூரியனைச் சுற்றி வருகிறது.
- இதற்குத் தானே பயணிக்கும் ஒரு சந்ததியைக் குறிக்கக் கூடிய மற்றும் ஹவாய் மந்திரத்தின் ஒரு பகுதியுமான வார்த்தையைக் கொண்டு கமோஓலேவா என்று பெயரிடப் பட்டது.

# மாநிலச் செய்திகள்

## கைசர்-இ-ஹிந்த்

- கைசர்-இ-ஹிந்த் என்பது மிகப்பெரிய மற்றும் பிரகாசமிக்க வண்ணமயமான ஒரு வண்ணத்துப் பூச்சியாகும்.
- இது தன் பெயரில் 'இந்தியா' என்பதைக் கொண்ட கைக்குப் பிடிபடாத சிறிய வாலுடைய ஒரு வண்ணத்துப் பூச்சியாகும்.
- இது சீனாவிலும் காணப்படுகின்றது.
- இது தற்போது அருணாச்சலப் பிரதேசத்தின் மாநில வண்ணத்துப் பூச்சியாக அறிவிக்கப் பட்டுள்ளது.



### வங்கலா திருவிழா

- மேகாலய மாநிலமானது அதன் 44வது வங்கலா திருவிழாவைக் கொண்டாடியது.
- இது 100 பறைகளின் ஒரு திருவிழாவாகும்.
- இது காரோ பழங்குடி மக்களின் அறுவடைக்குப் பிந்தைய ஒரு திருவிழாவாகும்.
- இது காரோ இன மக்களின் சூரியக் கடவுளான 'சல்ஜோங்க்' என்ற கடவுளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகின்றது.
- இது அறுவடைப் பருவத்தின் முடிவையும் குறிக்கிறது.
- 1976 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படும் இந்தத் திருவிழாவானது காரோ பழங்குடியினரின் (Garo tribe) மிக முக்கியத் திருவிழாவாகும்.



## விளையாட்டுச் செய்திகள்

### T20 உலகக் கோப்பை வெற்றிப்பட்டம்

- ஆஸ்திரேலிய அணியானது தனது முதலாவது T20 உலகக் கோப்பைப் பட்டத்தை வென்றது.
- இந்த அணி இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.
- ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் மார்ஷ் (Mitchell Marsh) போட்டியின் ஆட்ட நாயகனாகவும் டேவிட் வார்னர் தொடர் நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.



# முக்கிய தினங்கள்

## உலக நீரிழிவு நோய் தினம் – நவம்பர் 14

- நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிப்பதில் செவிலியர்கள் வகிக்கும் முக்கியப் பங்கு குறித்த விழிப்பணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "2021-23 : நீரிழிவுச் சிகிச்சைகளை அணுகச் செய்தல் – இப்போது இல்லையெனில் எப்போது?" என்பதாகும்.
- இது 1922 ஆம் ஆண்டில் சார்லஸ் ஹெர்பர்ட் என்பவருடன் சேர்ந்து இன்சுலின் என்ற ஹார்மோனைக் கண்டுபிடித்த சர் பிரடெரிக் பாண்டிங் என்பவரின் பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டு இன்சுலின் ஹார்மோன் கண்டுபிடிக்கப்பட்டதன் 100வது ஆண்டு நிறைவை அனுசரிக்கின்றது.




## குழந்தைகள் தினம் – நவம்பர் 14

- இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் குழந்தைகள் தினமானது 'பால் திவாஸ்' என அறியப்படுகிறது.
- இத்தினமானது குழந்தைகளின் உரிமைகள், நலன் மற்றும் கல்வி குறித்த

விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன் கொண்டாடப்படுகிறது.

- 1964 ஆம் ஆண்டில், நேரு அவர்களுக்கு கௌரவமளிக்கும் விதமாகவும் குழந்தைகள் மீது அவருக்கு இருந்த அன்பை நினைவுபடுத்தும் விதமாகவும் குழந்தைகள் தினமானது நவம்பர் 14 அன்று கடைபிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவில், ஆரம்பத்தில் குழந்தைகள் தினமானது உலகளாவிய குழந்தைகள் தினமான நவம்பர் 20 (1956) அன்று அனுசரிக்கப்பட்டது.




## ஜார்க்கண்ட் ஸ்தாபன தினம் – நவம்வர் 15

- இந்த மாநிலமானது 'வனங்களின் நிலம்' அல்லது 'புதர்களின் நிலம்' எனவும் அழைக்கப் படுகிறது.
- 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று பீகாரின் தென் பகுதியிலிருந்து சோட்டா நாக்பூர் பகுதி பிரிக்கப்பட்டு ஜார்க்கண்ட் என்ற மற்றொரு மாநிலம் உருவாக்கப்பட்டது.
- இதன் மூலம்  ஜார்க்கண்ட் இந்தியாவின் 28வது மாநிலமாகும்.




## சர்வதேச சகிப்புத்தன்மை தினம் – நவம்பர் 16

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் இத்தினத்தினை அனுசரித்து

வருகிறது.

- 1994 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 125வது பிறந்த நாளினை அனுசரித்த யுனெஸ்கோ அமைப்பானது அதன் மூலம் நவம்பர் 16 ஆம் தேதியினை சர்வதேச சகிப்புத் தன்மை தினமாக ஐ.நா அறிவிப்பதற்கு வழிவகுத்தது.
- இத்தினமானது மகாத்மாவினுடைய கொள்கைகளான அமைதி, அகிம்சை, சமத்துவம் ஆகியவற்றிற்கு கௌரவம் அளிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★